பக்கங்கள் - 12
விலை - ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 134

திங்கட்கிழமை
08 ஏப்ரல் 2024

பங்குனி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி



"உவைக்கு
அதிகார ஆசை சாகும்
மட்டும் போகாது
கண்டியளோ"

# ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ராஜபக்சக்கள்

## நாமலுக்குக் காலமிருக்கிறது:
## அரசியலில் ஓய்வுபெறும் எண்ணமில்லை - மஹிந்த



**கொழும்பு, ஏப்ரல் 8**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தெற்கில் சூடுபிடித்துள்ள நிலையில் தமது தரப்பின் சார்பில் சிறந்த வேட்பாளரைக் களமிறக்குவோம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேற்றுத் தெரிவித்துள்ளார்.** 11

## மாணவனைத் தாக்கிய ஆசிரியை கைதானார்!!!

வவுனியா, ஏப். 8

வவுனியா, சுந்தரபுரத்திலுள்ள பாடசாலையில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்ட ஆசிரியர் நேற்றுக் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மாணவன் மீது ஆசிரியர் தாக்கியதாகத் தெரிவித்து மாணவன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப் 11

## தவறான முடிவெடுத்த கைதிகள் 61 பேர் சாவு

கொழும்பு, ஏப். 8

கடந்த 4 ஆண்டுகளில் 61 சிறைக்கைதிகள் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. கூடுதலான தற்கொலைச்சம்பவங்கள் 2020ஆம் ஆண்டே இடம்பெற்றுள்ளன. 11

## வடக்கில் கடந்தாண்டில் நீரில் மூழ்கி 50 பேர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 8

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் 50 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் பொலிஸ் பிராந்தியத்திலேயே அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 11

## கேட்பாரின்றித் தொடரும் சட்டவிரோத மணலகழ்வு

கிளிநொச்சி, ஏப். 8

முல்லைத்தீவுக்கும் கிளிநொச்சிக்குமான மையப்பகுதியில் உள்ள கல்மடுகுளத்தின் பிரதான ஆறான நெத்தலியாற்றில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

நெத்தலியாற்றை நம்பி காலபோகம், சிறுபோகம் செய்து வரும் விவசாயிகளின் நிலங்களில் சட்டவிரோதமாக மண் அகழ்வும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக் 11

## ஈஸ்டர் தாக்குதல்: 3 நாள் விவாதம்

கொழும்பு, ஏப். 8

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் மூன்று நாள்கள் விவாதம் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 24ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது. 26 ஆம் திகதிவரை சபை அமர்வு இடம்பெறும். இம்மூன்று நாள்களிலேயே சபை ஒத்தி 11

## போரை வெற்றிகொண்ட இராணுவத்தை உரியமுறையில் அரசாங்கம் கவனிக்கவில்லை

### சஜித் ஆவேசம்



கொழும்பு, ஏப். 8

நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றிய இராணுவத்தினருக்கு அரசாங்கம் மாற்றாந்தாய் கவனிப்பையே மேற்கொண்டு வருவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 11

## பொலிஸார் மீது கத்திக்குத்து; துப்பாக்கியும் இயங்கவில்லை

கிளிநொச்சி, ஏப். 8

சந்தேகநபரைக் கைதுசெய்ய முற்பட்டபோது பொலிஸார் மீது அவர் கத்தியால் குத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளார். பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயன்றபோது துப்பாக்கியும் இயங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் விசுவமடுவில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக் 11

## வெடிமருந்துடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஏப். 8

பூநகரியைச் சேர்ந்த ஒருவர் ஆபத்தான வெடிமருந்தை, மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்வதாக பூநகரி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டு அவரை மடக்கிப் பிடித்தனர். 11

## கார்த்திகைப்பூ விவகாரம்:
## மேலிடத்து உத்தரவாலேயே மாணவர்களிடம் விசாரணை

### தெல்லிப்பழைப் பொலிஸார் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 8

பொலிஸ் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமையவே பாடசாலை மாணவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 11

## ரயில் - பிக்கப் விபத்து இளைஞன் உயிரிழப்பு

வவுனியா, ஏப். 8

ஓமந்தை, பன்றிக்கெய்தகுளத்தில் நேற்றுமுன்தினம் மு.ப. 10.30 மணியளவில் ரயிலுடன் பிக்கப் ரக வாகனம் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞர் உயிரிழந்துள்ளார்.

மன்னார், நானாட்டானைச் சேர்ந்த ராஜன் நிரோஜன் (வயது - 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி ரயில் பயணித்துக்கொண்டிருந்தபோது ஓமந்தை, பன்றிக்கெய்தகுளத்தில் ரயில் கடவையைக் கடக்க முயன்ற பிக்கப் ரக 11

## விபத்தில் இளைஞன் சாவு

வவுனியா, ஏப். 8

வவுனியா - செட்டிகுளம், வாளவைத்தகுளத்தில் இடம்பெற்ற பட்டா - மோட்டார் சைக்கிள் விபத்தில் 21 வயதான இளைஞர் உயிரிழந் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாண்டின் பின்னர் 'தரமான சம்பவங்கள்'

கொழும்பு, ஏப்.8

**தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் தெற்கு அரசியலில் தரமான சில சம்பவங்கள் அரங்கேறவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத்தேர்தலை நடத்துவதற்கு பொதுஜன பெரமுன முன்னெடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ள நிலையிலேயே அரசியல் களத்தில் சில அதிரடி மாற்றங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிலவேளை ஜனாதிபதியுடனான அரசியல் ரீதியிலான உறவை மொட்டுக் கட்சி முறித்துக்கொள்ளும் எனவும், ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க மொட்டுக் கட்சி தீர்மானித்துள்ளது என்றும் தெரிய வருகின்றது. மேதினக் கூட்டத்தின் போது இதற்கான சமிக்ஞைகள் வெளியிடப்படவுள்ளன.

அதன்பின்னர் பொதுஜன பெரமுனக் கட்சியில் இருந்து ஒருகுழு பிரிந்து வந்து ரணிலுக்கு நேசக்கரம் நீட்டும் எனவும், இதனால் மொட்டுக் கட்சி மேலும் பிளவடையும் என்றும் தெரிய வருகின்றது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்சம்பிக்க, டலஸ், விமல் அணி உள்ளிட்ட தரப்பினர் புத்தாண்டுக்குப் பிறகே எந்தத் தரப்புக்கு ஆதரவு அல்லது எப்படிப் போட்டியிடுவது தொடர்பான முடிவை எடுக்கவுள்ளன. (ஒ-44)


## தேர்தலில் களமிறங்க பல்துறையினர் திட்டம்

கொழும்பு, ஏப். 8

அடுத்த பொதுத்தேர்தலில் களமிறங்குவதற்கு பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பிரபல கலைஞர்கள் திட்டமிட்டுள்ளனர். இது சம்பந்தமாக பிரதான அரசியல் கட்சிகளுடன் அவர்கள் பேச்சு நடத்திவருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

அதன்படி இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். நடிகை ஒருவரும் களமிறங்குவது உறுதியாகியுள்ளது.

அதேபோல தொழில்சார் நிபுணர்கள் சிலரும், முன்னாள் படை அதிகாரிகளும் தேர்தலில் களமிறங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-44)



சீனா- இலங்கை

## ஆராய்ச்சி மையம் பேராதனையில்

கொழும்பு, ஏப்.8

சீனா- இலங்கை கூட்டு நீர் ஆராய்ச்சி மையம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சீன விஞ்ஞான கற்கைகள் நிறுவன பிரதித்தலைவர் பேராசிரியர் லமஹேவா, பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோர் இந்தத் திறப்பு விழா நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். இந்த ஆய்வு மையத்தினூடாக இலங்கையின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாய நீர்பாய்ச்சல், நீர் மாசடைவதால் ஏற்படும் சிறுநீரகப் பாதிப்பு போன்றவற்றுக்குத் தீர்வு காண்பது இந்த நிறுவனத்தின் முக்கியமான வேலைத்திட்டம் எனத் தெரிவிக்கப்படுகிறது. நீர் ஆய்வு தொடர்பான கற்கைநெறிகளும் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஒ-6)

## நடுக்கடலில் மாரடைப்பு; உதவிய இந்தியப் படை!

கொழும்பு, ஏப்.8

இலங்கையில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவருக்கு நடுக்கடலில் மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து இந்திய விமானப் படையின் உலங்குவானூர்தி அவரை மீட்டு சென்னை மருத்துவமனையில் சேர்த்துள்ளது.

இலங்கையில் புறப்பட்ட நீண்டநாள் படகில் இருந்த மீனவர் ஒருவருக்கு நேற்று மாரடைப்பு ஏற்பட்டதால் அவருடன் சென்றவர்கள் நடுக்கடலில் உதவி கோரினர். படகின் அருகே சென்ற இந்தியக் கடற்படையினர் தகவலை இந்திய விமானப் படையினருக்கு வழங்கினர்.

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி சம்பவ இடத்துக்கு வந்தது. இலங்கை மீனவர் மீட்கப்பட்டு, சென்னையில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (எ-இ)

## பிராந்தியப் பாதுகாப்புக்கு அமெ. எப்போதும் உதவும்!

கொழும்பு, ஏப்.8

பிராந்தியப் பாதுகாப்புக்கும் சமாதானத்துக்கும் அமெரிக்கா எப்போதும் இலங்கைக்கு உதவும் என்று வெள்ளைமாளிகையின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுக்கும் ஜேக் சல்லிவனுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடலின்போதே அவர் இந்தத் தகவலை ரத்நாயக்கவிடம் தெரிவித்துள்ளார். (அ-ம)

## தேவையற்ற நபர்களுடன் உரையாடல் வேண்டாம்!

### ஆசிரியர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 8

பாடசாலைச் சமூகம் சார்ந்து சக ஆசிரியர்களுடனும் உங்களுக்கு மிக நெருக்கமான உறவுகளோடும் உங்கள் தொலைபேசி உரையாடல்களை மட்டுப்படுத்திக்கொள்ளுங்கள் என்று ஆசிரிய சமூகத்தினருக்கு இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

இன்றைய யுகத்தில் சமூகப்பொறுப்புகள் என்பது எல்லோருக்கும் உரித்தானது. அதனைப் பலர் நிராகரித்தே செல்கின்றனர். அதிபர்கள், ஆசிரியர்களின் கடமைகளுக்குப் பல இடையூறுகளும், ஆபத்துகளும் ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்த்து நடப்பதே நல்லது.

நீங்கள் ஒரு மாணவனை கண்டிப்பதோ, தண்டிப்பதோ இன்று உங்களால் முடியாத காரியம். நீங்கள் ஆசிரியரின் கண்டிப்பில், தண்டிப்பில் உயர்ந்தீர்கள் என்பதை இன்றைய தலைமுறை ஏற்றுக் கொள்ளாது. அந்தத் தலைமுறையின் உறவினர்களும் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். ஆகையால் மாணவர்களைத் கண்டிப்பதையோ, தண்டிப்பதையோ முற்றாகக் கைவிடுங்கள். அதற்காக எந்தச் சந்தர்ப்பத்திலும் கற்பித்தல் பணியைக் கைவிடக்கூடாது. அது எமது மூச்சு. அது எமக்கு இறைவனால் தரப்பட்ட வரம். அவற்றை விடுத்து பாடசாலைச் சமூகம் சார்ந்து சக ஆசிரியர்களுடன் உங்களுக்கு மிக நெருக்கமான உறவுகளோடு உங்கள் தொலைபேசி உரையாடல்களை மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். பாடசாலை வளாகத்துக்குள் அவசியமற்ற நபர்கள் உள்வர அனுமதிக்கவேண்டாம்.

அண்மையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்தின் ஆளுநர், பாடசாலை வளாகத்துக்குள் கல்வி அமைச்சு செயலாளரின் அனுமதியில்லாமல் நுழையக்கூடாது என மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். இது எல்லோருக்கும் பொருத்தமானது. ஆகையால் மிகுந்த அவதானத்தோடு நாம் தொழிற்படவேண்டிய காலமிது.

குறிப்பாக மாணவர்களுடன் தொலைபேசியூடாகப் பேசுவது, அவர்களின் தொலைபேசி இலக்கங்களைப் பதிவுசெய்து வைப்பது, அவர்களின் உரையாடல்களை ஒலிப்பதிவில், ஒளிப்பதிவில் வைத்திருப்பதில் மிகுந்த அவதானத்துடன் இருங்கள். மாணவப்பருவம் என்பது எத்தகையது என்பதனை உங்கள் காலத்தோடு ஒப்பீடு செய்து பார்க்காதீர்கள் – என்றுள்ளது. (ம)

## வெளியேற்றப்படவுள்ள மூன்று அமைச்சர்கள்!

கொழும்பு, ஏப்.8

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களில் சட்டவிரோதமான முறையில் தங்கியுள்ள அமைச்சர்கள் மூவரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் குடியிருப்பு வீடுகளைக் கையாளும் பிரிவு இதுதொடர்பில் அமைச்சின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த அமைச்சர்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை- வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு வழங்கப்பட்ட அமைச்சரின் இல்லத்தில் அவரது குடும்ப உறுப்பினர்கள் தங்கியுள்ள நிலையில் அது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-இ)

## சஜித் - அநுர விவாதம் இந்த மாத இறுதிக்குள்

கொழும்பு, ஏப்.8

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்காவுக்கும் இடையிலான நேரடி விவாதம் மேதினத்துக்கு முன்னர் நடைபெறும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அநுரகுமார திஸாநாயக்கா விடுத்த அழைப்பை எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் விவாதத்தை விரைவாக நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் மரிக்கார் தெரிவித்துள்ளார். (ஒ-6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர் கொடுப்பனவு எதிர்வரும் 10க்கு முன்னர்!

கொழும்பு, ஏப்.8

அரச ஊழியர்களின் ஏப்ரல் மாதத்துக்கான கொடுப்பனவு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவில் 2024ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பும் உள்ளடங்கியுள்ளது என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது. ஒவ்வொரு பணியாளருக்கும் 10 ஆயிரம் ரூபா கூடுதல் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏப்ரல் மாதத்துக்கான ஓய்வூதியமும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)



# டொல்பின்கள் மீளக் கடலுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.8

வடமராட்சிகிழக்கு, கட்டைக்காட்டில் கரைவலையில் சிக்கிய 11 டொல்பின் மீன்கள் மீண்டும் மீனவர்களால் கடலில் விடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் கரைவலையில் 11 டொல்பின் மீன்கள் சிக்கியிருந்தன. அவற்றை மீனவர்கள் பாதுகாப்பாக அகற்றி, மீண்டும் கடலில் விட்டுள்ளனர். (ஏ-27)



# வங்காலையில் கடலரிப்பு மாவட்டச் செயலர் பார்வை

மன்னார், ஏப். 8

கடலரிப்புக்குள்ளாகும் மன்னார் - வங்காலை கடற்கரைப் பகுதிக்கு மன்னார் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

வங்காலை மீனவர் அமைப்பு மற்றும் மீன்பிடி தொழிலாளர்களின் அழைப்பின்பேரில் அவர் நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். அங்கு கடற்றொழில் அமைப்புகளுடன் கலந்துரையாடி கடலரிப்பைத் தடுக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்தார். (ச-213)

# சட்டவிரோத முறையில் கடலட்டைகள் இடமாற்றம்

## சந்தேகநபர்கள் ஐவர் கைது

மன்னாரில் சட்டவிரோதமாகக் கடல் அட்டைகளை இடமாற்றம் செய்த 5 சந்தேகநபர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது கடந்த வியாழக்கிழமை அதிகாலை, மன்னார் -அச்சங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே நடைபெற்றுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இதன்போது 589 கடல் அட்டைகள், 3 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் டைவிங்கியர்கள் என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். (ம-213)



# மல்லாவியில் வீதி சீரமைப்பு

முல்லைத்தீவு -மாந்தைகிழக்கின் கரும்புள்ளியான் தொடக்கம் மல்லாவிவரையான இணைப்பு வீதி கிரவல் மண் போடப்பட்டு புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய இந்த வேலைகள் நடைபெறுகின்றன. (ச-13)

# ஓட்டோவைத் திருடிய நபர் சைக்கிளில் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் ஓட்டோவைத் திருடிச்சென்றநபர், பொலிஸார் சுற்றிவளைத்தையடுத்து மாணவர் ஒருவரிடம் இருந்து சைக்கிளை பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கோப்பாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக ஓட்டோவை நிறுத்திவிட்டு மருத்துவமனைக்குள் சென்றுவிட்டுத் திரும்பிவந்து பார்த்தபோது ஓட்டோ திருடப்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து அவர் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாட்டை வழங்கினார். இதையடுத்து தகவல் பொலிஸ் நிலையங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாகக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார், குறித்த ஓட்டோவைத் தடுத்து நிறுத்தியபோது, ஓட்டோவை நிறுத்திவிட்டு அந்தநபர், மாணவர் ஒருவரின் சைக்கிளைப் பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார். ஓட்டோ மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)



# புதினம் தெரியுமோ?

பள்ளிக்கூடங்கள் எண்டாலே பிரச்சினைகளுக்குப் பஞ்சமில்லைப்போல. முந்தியெண்டா பள்ளிக் கூடத்துக்க ஏதும் நடந்தால் அதை உள்ளுக்கையே வைச்சு சமாளிச்சுப்போடுவினம். கூடுதலா பிள்ளையளுக்கு அடிச்ச பிரச்சினைதான்வரும். அப்பிடி ஆரும் பிள்ளைக்கு அடிபட்டால், அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டு 'வீட்டை அடிச்சவை எண்டு சொல்லக்கூடாது. அப்பிடியும் அவை கால்நொண்டேக்க, இல்லாட்டி காயத்தை கண் டிட்டு என்ன நடந்தது எண்டு கேட்டால் விளையாடேக்க விழுந்துபோனன் எண்டுதான் சொல்லோனும்' எண்டு ஒரு மார்க்கமா வெருட்டித்தான் அனுப்புவினம். பிள்ளையளும் பயத்தில வீட்டை சொல்லுறேலை. அதையும் மீறி பெற்றாருக்குத் தெரியவந்தால், அவையைக் கூப்பிட்டு 'உங்கடபிள்ளை படிக்கிற பள்ளிக்கூட மானத்தை கப்பலேத்தினால் உங்கட பிள்ளைக்கும்தானே மரியாதை இல்லை' எண்டெல்லாம் மண்டையைக் கழுவி, அவையின்ர வாயை அடைச்சுப் போடுவினம். அதோட அந்த விசயம் கிணத்துக்குப் போட்ட கல்லுமாதிரி அப்பிடியே தாண்டுபோடும். சில பெற்றோர் இதுகளுக்கெல்லாம் மசியாமல் சட்டநடவடிக்கை எடுக்கப்போறம் எண்டு வெளிக்கிட்டால், 'என்ன ஆதாரம் இருக்கு?' எண்டு கேப்பினம். பள்ளிக்கூடத்தில பிள்ளையை ரீச்சர் அடிச்சதுக்கு எப்பிடி ஆதாரம் திரட்ட ஏலும்? அடிகாயத்தை மட்டும் வைச்சுக்கொண்டு அது ரீச்சர் அடிச்சுத்தான் வந்தது எண்டு எண்பிக்கேலாதே. அதால பள்ளிக்கூடக்காரரோட சண்டையைப் பிடிச்சுக்கொண்டு, தங்கட பிள்ளையை வேற பள்ளிக்கூடத்துக்கு மாத்துறதுதான் பெற்றார் செய்யிற ஆகப்பெரிய நடவடிக்கை.

ஆனால் இப்ப அப்பிடியெல்லாம் ஆதாரமில்லை எண்டு பள்ளிக்கூடக்காரர் மழுப்ப ஏலாது. எல்லாரின்ர கையிலையும் போன் இருக்கு. எல்லாரும் எப்பவும் வீடியோ எடுக்கலாம், போட்டோ எடுக்கலாம், கதைக்கிறதை ரெக்கோர்ட் பண்ணலாம். அதுதான் இப்ப ரீச்சர்மாருக்குப் பெரும் தலையிடி. இப்பவெல்லாம் அடிக்கடி பள்ளிக்கூடங்களில பிள்ளையளுக்கு ரீச்சர்மார் அடிச்ச செய்தியள் வாறதுக்கு காரணமும் உந்தப் போன்தான். பாதிக்கப்பட்ட பிள்ளையளின்ர பெற்றோர், அந்தப் பிள்ளைக்கு அடிச்ச ரீச்சரோடையோ இல்லாட்டி பிரின்சிப்பலோடையோ போன்ல கதைச்சு, அதை ஆதாரமா ரெக்கோர்ட் பண்ணிட்டு, பிறகு அதை எங்க குடுக்க வேணுமோ அங்க குடுத்து பிரச்சினையை வெளியில கொண்டந்திடுகினம். இதால அடிச்சதை இல்லையெண்டு சொல்லவும் ஏலாமல், அடிச்ச ரீச்சரில அக்ஷனும் எடுக்க ஏலாமல் பள்ளிக்கூடக்காரர் தடுமாறுகினமாம். இதைத் தடுக்கிறதுக்கு இப்ப ஒரு வழியைக் கண்டுபிடிச்சு, அதை எல்லா ரீச்சர்மாருக்கும் அறிக்கையாகவும் அனுப்பியிருக்கு ஆசிரியர் சங்கம்.

'இனிமேல் ரீச்சர்மார் பெற்றாரோடையோ, தேவையில்லாத ஆக்களோடையோ, போனில கண்டபடி கதைக்கவேண்டாம். ஏலுமட்டும் அப்பிடியான கோலை கதைக்காமல் விடுறது இன்னும் நல்லது' எண்டமாதிரி ஒரு அட்வைஸ் அறிக்கை எல்லா ரீச்சர்மாருக்கும் அனுப்பப்பட்டிருக்கு. சீப்பை ஒளிச்சு வைச்சால் கலியாணத்தை நிப்பாட்ட ஏலுமோ? இப்பிடி கோல் கதைக்கிறதை நிப்பாட்டுறதைவிட, பிள்ளைக்கு அடிக்காமல் இருங்கோ எண்டுதானே அந்தச் சங்கம் சொல்லியிருக்கோனும். குற்றத்தை தடுக்கிறதை விட்டிட்டு, குற்றம் செய்துபோட்டு எப்பிடித் தப்பலாம் எண்டு ஐடியா குடுக்கிறதுக்குத்தான் உந்தச் சங்கங்கள் இருக்கோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிளகாய் பயிர்ச்செய்கை: முன்னேற்றத்துக்கான பாதை

## விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு தெரிவிப்பு

மன்னார், ஏப். 8

**சிறந்த விவசாயிகளாகத் திகழும் நீங்கள் வாங்குபவர்களாக இருக்காது கொடுப்பவர்களாக மாறவேண்டும். மிளகாய் ஒரு பணப்பயிர். இதைச் செய்யும்போது கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வாய்ப்புகள் அதிகம்- என மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் நான் நீண்டகாலமாக சேவையாற்றி வருவதால், இந்தக் கிராமப் பகுதிகளில் பயிர்ச்செய்கை தொடர்பாக எந்தத் திட்டங்கள் வந்தாலும் நான் முதலில் முன்மொழிவது மிளகாய் பயிர்ச்செய்கையையே.

ஏனெனில் மிளகாய் ஒரு பணப்பயிர். இதைச் செய்யும் போது கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வாய்ப்புகள் அதிகம். முன்னாள் அமைச்சர், கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்தப் பகுதிகளில் மிளகாய் பயிர்ச்செய்கையை ஊக்கு விக்கவேண்டும் எனத் திட்டம் தீட்டியிருந்தார். இதனால், உங்களுக்குப் பயிர்ச்செய்கைதொடர்பாகஎதுதேவையானாலும் எம்மை நீங்கள் நாடலாம். இன்றைய இந்தப் பயனாளிகளின் நலன் கருதி விவசாயப்போதனாசிரியர்களை அடிக்கடி இங்கு அனுப்பி, இந்தச் செய்கையைக் கண்காணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் வாரம் ஒருமுறையாவது உங்களுக்கு விவசாயம் தொடர்பாகப் பயிற்சி வகுப்புகளும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கூறினார். (ப-60)

# தலைமையை ஏற்கத் தயார்

## தயாசிறி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 8

சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு தீர்மானித்தால் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்பதற்குத் தயாராகவே இருக்கின்றேன் என்று சுதந்திரக்கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவி வழங்கப்பட்டால் அதனை ஏற்பதற்கு தயாரா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க நான் தயாரில்லை. எனினும், கட்சியின் மத்திய குழு தீர்மானித்தால் பதவியை ஏற்பேன். அதுமட்டுமல்ல கட்சியை வெற்றியை நோக்கியும் அழைத்துச்செல்வேன். இடதுசாரி சக்திகளுக்கு சிறந்ததொரு தலைமைத்துவம் இல்லை. அதேவேளை, சஜித் பிரேமதாஸ என்பவர் சிறந்த தலைவர். அவர் கொள்ளையடிக்காத அரசியல்வாதி -என்றார். (ஒ-44)

# 10 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

கொழும்பு, ஏப். 8

கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த 10 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் பாதிக்கப்பட்ட சிறுமி அனுமதிக்கப்பட்டிருந்த அதே விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த மற்றுமொரு சிறுமியின் தந்தையென தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமி இது தொடர்பில் தனது தாயிடம் தெரிவித்ததையடுத்து சந்தேகநபர் காலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ச-இ)

# ஜீவனுக்கு சர்வதேச அங்கீகாரம்

கிளிநொச்சி, ஏப். 8

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரான ஜீவன் தொண்டமான் இளம் உலகத் தலைவராக உலக பொருளாதார மன்றத்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை அமைச்சர் ஒருவர் இளம் உலகத் தலைவர் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுகின்றமை இதுவே முதன்முறையாகும். (ச-இ)

# சுதந்திரக்கட்சி ஆவணங்கள் மாயம்

கொழும்பு, ஏப். 8

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இருந்து பல முக்கியமான ஆவணக் கோப்புகள் காணாமற் போயுள்ளன என கொழும்பு மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால அளித்துள்ளார். (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். உறவுகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வியாபாரம் செழிப்பாக இருக்கும். விநாயகரை வழிபடுவது நன்று.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் பாதிப்பு இருக்காது. வியாபாரத்தில் பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. செலவுகள் அதிகரிப்பதால் சஞ்சலம் ஏற்படும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். உடல்நலனில் கவனம் தேவை.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். உறவுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்த ஏமாந்த பணம் கைக்கு வரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. சில பிரச்சினைகள் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் கடன் கேட்டு நச்சரிப்பார்கள்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் . சற்று சோர்வு உண்டாகும்.

# 4,316 ஏக்கர் நிலப்பரப்பில் வவுனிக்குளத்தில் சிறுபோகம்

வவுனிக்குளத்தின் கீழ் 4 ஆயிரத்து 316 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை பற்றிய கூட்டம், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் 4 ஆயிரத்து 316 ஏக்கரில் நெற்செய்கையும், 300 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. (ஏ-13)

# மூவர் கைது

கொழும்பு, ஏப். 8

பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட சுற்றிவளைப்பின்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு மற்றும் 4 வாள்கள் என்பன மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## மறுவாழ்வு மட்டுமே தீர்வல்ல!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கஞ்சா கடத்தல் மற்றும் விநியோகத்துடன் தொடர்புடைய மிகமுக்கியமான குழுவொன்று அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் வலைப் பின்னல் தொடர்பில் முற்றுமுழுதான விசாரணை களை நடத்திவருவதுடன், மேற்படி போதைப் பொருள் கடத்தல்காரர்களின் சொத்துகள் மற்றும் வங்கிக் கணக்குகள் என்பவற்றை முடக்கி, அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கவும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். அதற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப் பாணத்தில் இளைஞர்கள் போதைப்பொருளுக்கு ஆட்படுவது சாதாரணமான விடயமாக இன்று மாறி விட்டது. சிறுவர்கள், யுவதிகள், இளைஞர்கள் என எல்லா வயதுப் பிரிவினரையும் - சமூகப் பிரிவு களையும் போதை மிக இலாவகரமாக இரையாக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. சமூகச் சீரழிவுகள், கலாசாரச் சீரழிவுகள் என போதையின் பிடியில் நின்று உழலும் இளைஞர்களையும், யுவதிகளையும் மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்புகின்றபோதி லும், எந்தவொரு காத்திரமான முன்னேற்றமும் ஏற்பட்டதாகவில்லை. போதையைத் தடுப்ப தற்காக மேற்கொள்ளப்படும் திட்டங்களை விட வும், போதை இளைஞர்களிடத்தில் பரவும் வேகமே அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் மறுவாழ்வுக்குட்பட்டோர்கூட மீண்டும் மீண்டும் போதையின் பாதையில் பயணிக்கத் தலைப்படு வதையும் கண்முன்னே காணக்கூடியதாகவுள்ளது. ஏனெனில், மறுவாழ்வுக்கு ஒருவர் சென்று வந்தாலும், அவருக்கு மீண்டும் போதைப்பொருள் கிடைப்பதற்கு ஏதுவான அணுகல் நிலை சமூகத்தில் உயிர்ப்புடன் இருக்கும்போது எவ்வாறு மறு வாழ்வுத்திட்டம் வெற்றியளிக்கமுடியும்? போதைக்கு எதிரான நடவடிக்கைகள் எனப்படு பவை வேரில் இருந்து ஆரம்பிக்கப்படவேண்டி யவை. கண்ணுக்குத் தெரியும் கிளைகளை அகற்று வதால் எந்தமாற்றமும் ஏற்படாது என்பதே உண்மை.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் தாயகப் பகுதி கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொர்க்கபுரியாக மாற்றம்பெற்று, நெடுங்காலம் ஆகிவிட்ட நிலையில், எவ்வளவுக்கெவ்வளவு சட்டம் இறுக்கப்படுகின்றதோ, தண்டனைகள் கடுமையாக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு போதையின் பாதை சுருங்கிச் செல்லும். ஆதலால், இதுவிடயத்தில் கூடுதல் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டியவர்களாக பொலிஸாரே இருக்கின்றனர். எனவே, வழமையான கைது, விளக்கமறியல், மறுவாழ்வு என்ற செயற்றிட்டங் களுக்கு அப்பால், போதைப்பொருள் மாபியாக் களின் சொத்துகளை முடக்குவது, வங்கிக் கணக்கு களை முடக்குவது போன்ற நடவடிக்கைகளை ‘யுக்திய’ சுற்றிவளைப்பின்கீழ் செயற்படுத்துவது வரவேற்கத்தக்கதே.

எந்தவொரு நாட்டில் போதைப்பொருள் தலை விரித்தாடுகின்றதோ அங்கு மருத்துவத்துறைக்கான நிதியொதுக்கீடுகள் அதிகரிக்கும், பணம் தண்ணீ ராகச் செலவாகும், இதுவே யதார்த்தம். ஆதலால், இலங்கையில் கட்டற்று ஊடறுத்துத் திரியும் போதைப்பொருள், மருத்துவத்துறையை ஆட்டம் காணச்செய்வதுடன், கஜானாவையும் காலி செய்யும். அவ்வாறான நிலைமைக்குள் நாடு வீழ்வதற்கு முன்னர், போதைப்பொருள் மாபி யாக்களை கூண்டோடு இல்லாதொழிப்பதுதான் நாட்டின் இருப்பும் எதிர்காலமுமாகும்...!




# இலங்கைக் கடனுக்கு 2043 வரை அவகாசம்?

## விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு

**கொழும்பு, ஏப்.8**

**இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகச் சொல்லப்படும் நிலையில், கடன்களை மீளச் செலுத்துவதற்காக இலங்கைக்கு 2043ஆம் ஆண்டுவரை அவகாசங்கள் கிடைக்கலாம் என்று கருதப்படுகின்றது.**

ஜப்பானின் தலைமையில் இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிகள் தற்போது முன் னெடுக்கப்படுகிறது. பிரான்ஸ், இந்தியா ஆகிய நாடுகள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றன. சீனா பார்வையாளராகச் செயற்பட்டு வருகின்றது. இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிகள் கடந்த சிலவாரங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும், இதில் இறுதி உடன்பா டொன்று எட்டப்படுவதில் சிரமம் நிலவியது. சீனா சம்மதத்தைத் தெரிவிக்காதமையும் கடன் மறுசீரமைப்புப் பணிகள் தாமதமானமைக்கு பிரதான காரணங்களில் ஒன்றாகும். இந்த நிலையில், கடன் சீரமைப்பில் பொதுவான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. இதன்படி 2028ஆம் ஆண்டுவரை இலங்கை கடன் களையோ அவற்றுக்கான வட்டிகளையோ செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள் ளது என்று தெரியவருகின்றது. 2028ஆம் ஆண்டின் பின்னரான 15 வருடங்களில் அதா வது 2043ஆம் ஆண்டுவரை இலங்கைக்கு அவகாசம் வழங்க பொது இணக்கப்பாடு எட்டப் பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (அ-ம)

## பிரசவ அறையில் தந்தைக்கு அனுமதி

குழந்தை பிறக்கும்போது பிரசவ அறையில்தந்தையை அனுமதிக்கும் புதிய திட்டம் அரச மருத்துவமனையான காசல் மகளிர் மருத்துவம னையில் முதன்முறை யாகச் செயற்படுத்தப்படவுள் ளது.மருத்துவமனைப் பணிப் பாளர் மருத்துவர் அஜித் தண்டநாராயணா இதனைத் தெரிவித்தார். இந்தத் திட்டம் தாயின் வலியை இருவருக் குள்ளும் பகிர்ந்து கொள்ள உதவும்.கணவன்-மனைவிக்கு இடையேயான உறவும், பெற்றோர், குழந்தைக்கான உறவும் வலுவடையும் என் றும் அவர் கூறினார். (ச-இ)

## பொலநறுவையில் திரவப்பால் உற்பத்தி

கிளிநொச்சி, ஏப். 8

பிரான்ஸ் அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் 650 மில் லியன் ரூபா செலவில் பொலநறுவையில் நிர்மா ணிக்கப்பட்ட திரவப்பால் உற்பத்தித் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டுள் ளது.

மாவட்ட மட்டத்தில் பால் பதப் படுத்தும் நிலையங்களை நிர்மாணிக்கும் வேலைத்திட் டத்தின் கீழ் இந்தத் தொழிற் சாலை நிர்மாணிக்கப்பட்டது. 6 பிராந்திய பால் பதப்படுத் தும் நிலையங்களை நிர்மா ணிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலை யில், மூன்றாவது நிலைய மாக இந்த நிலையம் திறக் கப்பட்டுள்ளது. (ச-இ)

## இடதுசாரி கூட்டணி அமைக்க ஏற்பாடு

தெற்கு அரசியலில் இடதுசாரி கூட்டணியொன்றை அமைப்ப தற்கான முயற்சிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள், டலஸ் அழகப்பெரும, ரொஷான் ரணசிங்க உள்ளிட்ட தரப்பினர் இணைந்து இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர். (ச-44)

## காலாவதி மருந்துகள் 15 கோடி ரூபா நட்டம்

மருந்துகளின் காலாவதி மற் றும் சேதம் காரணமாக 2022 ஆம் ஆண்டிலும் அதற்கு முந் தைய ஆண்டிலும் அரச மருந்து சட்டக் கூட்டுத்தாபனத் துக்கு 15 கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தேசிய தணிக்கை அலு வலகம் வெளியிட்டுள்ள சமீ பத்திய அறிக்கையில் தெரிய வந்துள்ளது. (எ-இ)

## நாளை

09.04.2024
செவ்வாய்க்கிழமை
பங்குனி 27

சுபநேரம் : 10.36 - 12.06
ராகுகாலம் : 03.06 - 04.36


## நாளொரு நல்வார்த்தை

எல்லாத் துன்பங்களுக்கும்
இரண்டு மருந்துகள் உண்டு.
ஒன்று காலம்; இன்னொன்று மௌனம்.

—அப்துல் கலாம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணன்



இறுதி பங்குனித் திங்களை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# கொடிய நோய்களைத் தீர்ப்பவள் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள்

வரலாற்றுச் சிறப்புக் கொண்ட ஆலயங்களுள் மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை ஆலயமும் ஒன்றாக விளங்குகின்றது. இந்த ஆலயம் பழமையும் புதுமையும் தெய்வீகமும் நிறைந்த சக்தி ஆலயமாக விளங்குகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்குப் பகுதியான மட்டுவில் பகுதியில் ஒரு காவல் தெய்வமாக பன்றித் தலைச்சி அம்பாள் வீற்றிருந்து இந்தப் பிரதேச மக்களைப் பாதுகாத்து வருகின்றாள்.

குறிப்பாக சாவகச்சேரி - புத்தூர் வீதியில் வயலும் வயல் சார்ந்த பகுதியில் கண்ணகை அம்பாள் அமர்ந்துள்ளாள். இந்த ஆலயம் மட்டுவில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. சைவமும் தமிழும் வளர்ச்சிகண்ட பிரதேசமாக இவ்விடம் விளங்குகின்றது. அம்பாள் ஆலயம் தொன்மைவாய்ந்ததும் தலச்சிறப்புக் கொண்டதுமாகும். ஆலயத்தைச் சூழ மருதமரங்கள், புளியமரங்கள் என பெருவிருட்சங்கள் நிறைந்து ஆலயத்துக்கு அழகு சேர்ப்பதுடன் நிழல் பரப்பி வருகின்றன.

அம்பாள், பல வருடங்களுக்கு முன்னர், சிறிய குடில் வடிவிலான கட்டடத்தில் அமர்ந்திருந்து அருள் வழங்கினாள் என அறியமுடிகிறது. பின்னர் கி.பி. 1750 இல் அம்பாள் ஆலயம் வைரமான கற்கள் கொண்டு நாதர் கதிர்காமர் என்பவரால் கட்டப்பட்டது. பின்னர் அம்பாள் ஆலயத்தில் படிப்படியாக ஆலய திருப் பணிகள் நடைபெற்றுவந்தன. 04.07.1991ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று 45 நாள்கள் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றது. இந்த நாளில் விசேட கும்பாபிஷேக மலரும் வெளியிடப்பட்டது.

**அன்னையின் அற்புதங்கள்**

அன்னை குடியமர்ந்துள்ள மட்டுவில் பதியை திங்கள் ஊர் என்றும் சொல்லுவார்கள். அதேபோல சந்திபுரம் எனவும் பெயர் உண்டு. பன்றித்தலைச்சிக் கண்ணகைக்கு தினமும் ஆறுகாலப்பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. திங்கள் என்றால் மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகையை பக்தர்கள் நினைந்து வழிபடுவார்கள். பங்குனித் திங்கள், கார்த்திகைத்திங்கள் முக்கியமான நாள்களாகும். அன்னையான கண்ணகை அம்மன் ஒரு குளிர்ந்த தெய்வம். அன்னையைத் தொடர்ந்துவழிபட்டால் அவளது புதுமைகள் பலகிடைக்கும். பக்தர்கள் தொடர்ந்து நான்கு திங்களுக்கு அன்னையிடம் சென்று வழிபட்டால் அவர்களுக்கு நன்மைகள் பல கிடைக்கும். அன்னை தன் மீது அளவற்ற அன்பு வைத்திருந்த பக்தன் ஒருவருக்காக அருள் வழங்கி புதைக்கப்பட்ட பசுமாட்டின் தலைப்பகுதியை பன்றித் தலையாக மாற்றி அந்தப் பக்தனுக்கு அருள் வழங்கியவள்.

**பங்குனித் திங்கள் சிறப்பு**

பங்குனித் திங்கள் என்றால் தென்மராட்சியில் மட்டுவில் கிராமம் எங்கும் தூய்மை பேணப்படும். திங்கட்கிழமை அதிகாலை தொடக்கம் அம்பாளின் சந்நிதானம் பக்தர்களால் நிறைந்து காணப்படும். அம்மன் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் தீர்த்தக்கேணியில் நீராடுவார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என பேதமில்லாது தீராத நோய்களைத் தீர்க்க வல்ல அருமருந்தாகும். கொப்பளிப்பான், சின்னமுத்து, கண் நோய், அம்மை எனப் பெரும் நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் நீராடி சுகம் பெறுவர்.

**நேர்த்திக் கடன்கள் செய்தல்**

பக்தர்கள் அம்மனுக்கு நன்றிக்கடனாக பக்தர்களது பிணிகள் துன்பங்கள் போக்கியமைக்காக கற்பூரச்சட்டி எடுத்தல், கண் பானையில் கற்பூரம் எரித்தல், பொங்கல் செய்தும் நீர்க்கஞ்சி வார்த்தும், அன்னதானம் செய்தும் ஆலய வாசலில் அம்பாளுக்கு நிவேதித்து வழிபடுவர். அத்துடன் பால் செம்பு எடுத்தல், காவடி எடுத்தல், பாற் காவடி, தூக்குக் காவடி என நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வர்.

**ஏடு படித்தல்**

சுமார் 40 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அம்பாளின் அடியார்களிடம் அம்பாளின் திருப்பாடல்கள் அடங்கிய (சிலம்புகூறல்) ஏடு இருந்தது. அம்பாளின் அடியவர்கள் அம்பாள் சந்நிதி வாசலில் நின்று அந்த ஏட்டுப் பாடல்களை மிருதங்கம், உடுக்கை, கைத்தாளம், ஆர்மோனியம் உட்பட பக்கவாத்தியங்களுடன் பாடுவார்கள்.

அம்பாளின் ஆலயச் சூழல் வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகும். அங்கு வயல்களில் விவசாயிகளால் மட்டுவில் கத்தரிக்காய் பயிரிடப்படுவது வழமை. பங்குனித் திங்கள் நாள்களில் கத்தரிக்காய் விற்பனைக்கு வந்துவிடும். ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அம்பாளுக்கு நிவேதிக்க பச்சையரிசிப் பொங்கலுடன் வெள்ளைக் கத்தரிக்காய் கறியும் சமைத்து படையலிட்டு உண்டு மகிழ்வது சிறப்பானது. கொடிய தொற்றுநோய்கள், பிரச்சினைகள், துன்பங்கள் யாவும் அன்னையின் பெயரை சொல்லி வழிபடவே துன்பங்கள் அகன்று ஓடிவிடும். கண்நோய்கள், தீராத நோய்கள் தீர்ந்து விடும்.



சமூக ஆளுகைத் தளத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் பச்சிலைப் பள்ளி பிரதேசசபை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (எ-159)



காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் பெரிய வெள்ளி வழிபாடு அண்மையில் நடைபெற்றது. (ச-555)





பேசாலை பங்குச் சமூகம் வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க குறும் கலைவடிவம் உடக்கிலான திருப்பாடுகளின் ஆற்றுகை புனித வெற்றி நாயகி ஆலய அருட்பணி பேரவையின் ஏற்பாட்டில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (எ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## சொத்து விற்பனைக்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான பின்வரும் சொத்துக்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றை கொள்வனவு செய்ய விரும்புவோர் அலுவலக நேரத்தில் நேரடியாக பார்வையிட்டு 27.04.2024 சனிக்கிழமை முற்பகல் 09.30 - நண்பகல் 12.00 க்கு முன்னராக தங்களது கூறுவிலைகள் கிடைக்கக்கூடியவாறு தனித்தனியே ஒவ்வொரு சொத்துக்களுக்கும் கூறுவிலையினை குறிப்பிட்டு **"தலைவர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், வேலணை"** எனும் முகவரிக்கு கடித உறையின் மேல் மூலையில் கூறுவிலை கோரல் என தலைப்பிட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

01.பாரவூர்தி NP GR 5214
02.பாரவூர்தி NP 42 - 1518
03.உழவு இயந்திரம் RA 0056
04. NP RV 0002 உழவு இயந்திர பெட்டி
05.முச்சக்கரவண்டி NP GO 6738
06.இரும்புப் பெட்டகம் - 03

குறிப்பு: 01.மீளளிக்கப்படாத கேள்விப்பண வைப்புத் தொகையாக ரூபா 1000.00 செலுத்தி விண்ணப்பப் படிவத்தை தலைமை அலுவலகத்தில் கடமை நேரத்தில் (விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் முற்பகல் 09.30 - மாலை 03.00 வரையும் சனிக்கிழமை முற்பகல் 09.30 - நண்பகல் 12.00) பெற்றுக் கொள்ளலாம்)

02.அலுவலகத்தில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தின் விண்ணப்பம் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

03.கூறுவிலையில் குறிப்பிடப்படும் பணத்தினை அன்றைய தினம் முழுமையாக செலுத்தி சொத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

சொத்துக்களைப் பார்வையிடும் நேரம் :- முற்பகல் 09.30 - மாலை 03.00 (விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில்) சனிக்கிழமை முற்பகல் 09.30 - நண்பகல் 12.00

**தொலைபேசி இலக்கம்: 021 221 1522, 077 381 6729**

**தலைவர்,**
**வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**வேலணை.**

(CR 42169) S-1



## பெயர்மாற்றம்

12 ம் கட்டை விசுவமடு கிழக்கில் வதியும் கனகலிங்கம் புகழ்லேந்திரன் ஆகிய நான் எனது பெயரை கனகலிங்கம் தனுஷன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் கனகலிங்கம் தனுஷன் என்றே கையொப்பமிடுவேன் என்று சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

CR (42171) V-1



## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 07 . 1951

மறைவு 06 . 04 . 2024

### கிறேஷியன் கமலாதேவி

கனகசபை வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கிறேஷியன் கமலாதேவி அவர்கள் நேற்று முன்தினம் (06.04.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னார் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், அந்தோனிப்பிள்ளை கிறேஷியனின் பாசமிகு மனைவியும், கிறேஷியன் நிர்மலின் (Softlogic Stock Broker) பாசமிகு தாயாரும், நிர்மல் ஷாருகேஷியின் (சட்டத்தரணி) பாசமிகு மாமியாரும், விஜயராஜா (கனடா), கோகிலாதேவி , காலஞ்சென்ற லோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கில்டா, ஜெகதீசன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், உதயறூபன் ஜனனியின் (சுவிஸ்) ஆசைப் பெரியம்மாவும், சதீஸ்குமார் வினோ ஷியானி, வித்தியா ஆகியோரின் அன்புப் பெரிய அத்தையும், காயா, ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கனகசபை வீதி, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கனகசபை வீதி,**
**மானிப்பாய்.**
**077 451 0000**

(CR 42170) S-1

**தகவல்:**
**மகன் - நிர்மல்**


# ஒலி மாசடைதல் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஏப். 8

ஒலி மாசடைதல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட பதினொரு பேர் கொண்ட சட்ட வல்லுநர்கள் குழு தனது அறிக்கையை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்துள்ளது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும், பொலிஸ் திணைக்களமும் ஒலி மாசடைதல் சட்டத்தை மேலும் இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுற்றாடல் மாசடைதல் சட்டத்தின் கீழ் சமுதாய ஒலி மாசடைதல் தொடர்பாக சுற்றாடல் திணைக்களம் அனுப்பும் சுற்ற றிக்கைகளை பொலிஸார் நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் சட்டவல்லுநர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-6)

# மதுபோதையில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஏப். 8

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11 மணியளவில் நபரொருவர் மதுபோதையில் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளார்.

சுமார் ஐம்பது வயதான நபர் மதுபோதையில் துவிச்சக்கரவண்டியை முறையற்ற வகையில் சுன்னாகம் சந்தி ஊடாகச் செலுத்திச் சென்றதுடன் தகாத வார்த்தைகளால் கத்தியவாறும் சென்றுள்ளார். (ஒ-66)

# மெய்வல்லுநர் போட்டி பிற்போடுதல்

யாழ்., ஏப். 8

பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு நிலவும் வெப்பநிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது. நிகழ்வு நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பாடசாலை அதிபர் நபரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ)


## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 12 . 1950

மறைவு 07 . 04 . 2024

### நாகரத்தினம் ஆனந்தராசா

காளிகோவிலடி, வட்டு - தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் ஆனந்தராசா நேற்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - தெய்வானை தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னராசா - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், சற்குணதேவியின் பாசமிகு கணவரும், நிருஜா (தேசிய சேமிப்பு வங்கி - திருநெல்வேலி), யுஷானி (தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), கௌதமி (மென்பொருள் பொருளியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜன், சோபிதன், சிவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌசலாதேவி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தம்பிராசா, தவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிந்தாதேவி, சறோஜினிதேவி, செல்வேந்திராதேவி, காலஞ்சென்ற சர்வேந்திரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அத்விகா, அஹர்ணியா, அகரன், சமித்ரா, ஆரணன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2024) திங்கட்கிழமை வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**வட்டு - தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**கஜன் - 077 755 0886**
**யுஷானி - 077 363 0642**

(cs 54855) (N-1)



## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



சிறப்பு 23 . 03 . 1944

இறப்பு 08 . 04 . 2017

அமரர்
### மாணிக்கவாசகர் திலகவதி

ஏழாண்டு கடந்தாலும் எம்
நினைவில் நீ என்றும்
வான்வெளியில் தோன்றும் மதி
போல் - எம்
வாழ்வின் பேரொளியாய் என்றும்
திகழ்பவளே
அழியாத நினைவுகளை சுமந்து
நிற்கிறோம் அம்மா!

**காரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.**

(cr 42168 (N-1)

**பாசமுடன்**
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிக்கையாளர் கவனத்திற்கு

கிளிநொச்சி A9 வீதி கந்தசாமி கோவில் அருகில் அமைந்துள்ள **சாளினி ஓட்டோ கூல்** நிறுத்தப்பட உள்ளதால் எம்மிடம் திருத்த வேலைக்குத் தரப்பட்ட **குளிர்சாதனப்பெட்டி, மின்சாரப்பொருட்களை** இம்மாதம் இறுதிக்குள் மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : உரிமையாளர்.**
**077 958 3343**

(CS/28255) J-1

## கண்ணீர் அஞ்சலி

## தெய்வேந்திரம் தையல்நாயகி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி G. அமிர்தகௌரி** அவர்களின் அன்புத் தாய் **தெய்வேந்திரம் தையல்நாயகி** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரி சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



## கலைவிழாவிலிருந்தும் வெடுக்குநாறிமலை அகற்றம்

வவுனியா, ஏப். 8

வவுனியா மாவட்ட செயலக சித்திரைக் கலை விழாவிலிருந்து வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் என்ற பதம் நீக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சித்திரைக் கலை விழாவில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் மலை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் என்று எழுதப்பட்ட வசனம் மறைக்கப்பட்டு வெறுமையான சிவலிங்கம் மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-110)

## செல்லப்பா சுவாமி குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஏப். 8

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 109 ஆவது ஆண்டு குருபூசைத் தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் யோகர் சுவாமிகள் சமாதியடைந்த 60 ஆவது ஆண்டு நினைவாக, 'உயிர்க்குயிர்க் கடவுளாகிய சிவயோக சுவாமிகள்' எனும் தலைப்பில் யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்ட அமரர் கந்தப்பிள்ளை ஆசிரியர் எழுதிய நூல் வெளியிடப்படவுள்ளது.

நூலுக்கான வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் ம.பாலகைலாசநாதக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

குருபூஜை நிறைவில் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## 20 ஆவது ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
24.04.1953

மறைவு
08.04.2004

அமரர்

## வேலுப்பிள்ளை இராஜரட்ணம் (செல்வம்)

(முன்னாள் R.B Booking Centre உரிமையாளர்)

அப்பா இன்றுடன் நீங்கள் எங்களை பிரிந்து
இருபது வருடங்கள் ஆகிவிட்டன
இருக்கும் போது கற்றுத் தந்ததைவிட
இறந்தபின் அதிகமாய் கற்றுத் தந்த ஜீவன் நீங்கள் அப்பா
நாங்கள் திரும்பப்பெற நினைப்பது உங்களுடன்
வாழ்ந்த நாட்களை அல்ல உங்களை அப்பா
இளம் வயதில் இழந்துவிடக் கூடாத சொத்து அப்பா
ஆனாலும் இழந்துவிட்டோம் உங்களை
மறுபிறவி ஒன்று இருந்தால்
மீண்டும் உங்கள் பிள்ளைகளாக பிறக்க வேண்டும்
அதுவரை காத்திருப்போம் உங்கள் நினைவோடும்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/28310) J-1

## அறிவித்தல்

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் (குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவை பிரிவு 16 ன் கீழான அறிவித்தல்)

1. தம்பிராசா சசிதரன்
   தலைவர்,
   அம்பாள் சனசமூக நிலையம்,
   செம்பாட்டன் தோட்டம்,
   வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

2. செல்வராசா கிறேஸ்குமார்
   செயலாளர்,
   அம்பாள் சனசமூக நிலையம்,
   செம்பாட்டன் தோட்டம்,
   வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை.

3. நாகன் கிருஸ்ணபவான்
   பொருளாளர்.
   அம்பாள் சனசமூக நிலையம்,
   செம்பாட்டன் தோட்டம், வட்டுதெற்கு,
   வட்டுக்கோட்டை.

வழ. இல-நாண்ணாவிதம் /111/2017 எதிர்

மனுதாரர்கள்

1. கார்த்தி செல்லத்துரை
   தலைவர்
2. கதிரவேலு இராசையா
3. அருணி இராசேந்திரம்
4. கணபதி இராசா
5. வேலு தேவராசா
   மனோன்மணி அம்மன்
   பரிபாலனசபை,
   வட்டுக்கோட்டை மனோன்மணி
   அம்மன ஆலயம்.
   வட்டு தெற்கு,
   வட்டுக்கோட்டை.

எதிர்மனுதார்கள்

இவ்வழக்கானது மேற்படி மனுதாரர்களினால் கௌரவ இம்மன்றில் 2017.03.13 ம் திகதிய தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பிரதான நிவாரணமாக வேண்டப்பட்டவாறு மனுவில் விபரிக்கப்படுவதும் வட்டுக்கோட்டை மனோன்மணி அம்மன் ஆலயத்திற்கு உரித்தான ஆதனங்களிற்கு மனுதாரர்களே என்ற ஒப்படைப்பு கட்டளை (Westing order) உரித்துடையவர்கள் என்ற கட்டளை கோரியுள்ளமையால் மேற்படி ஆலயத்துடன் தொடர்புடைய எவரும் எதிர் வாதிட அக்கறையுள்ள எவரும் இதன் பின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள் தொடர்பில் அல்லது மேலே மனுதாரர்களால் கோரப்பட்ட நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் 2024.05.06 ம் திகதி காலை 9.00 மணிக்கு கௌரவ மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நீதிமன்ற கட்டளைப்படி**

வரைவு
மனுதாரர்களின் சட்டத்தரணி

பதிவாளர்


(cs.54641) (N-1)

## யம சங்கார உற்சவம்

யாழ்., ஏப். 8

'மயிலணிச் சிவன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் சிறீ விஸ்வநாத சுவாமி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை யம சங்கார உற்சவம் இடம்பெறவுள்ளது. இன்று மாலை 4 மணிக்கு சிறப்புப் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து மார்க்கண்டேயர் சிவ பூஜைசெய்யும் நிகழ்வும், மங்கல வாத்தியங்கள் முழங்க விஸ்வநாத சுவாமி வீதி உலா வந்து காலனைச் சங்காரம் செய்யும் திருக்காட்சியும் நடைபெறுமென மேற்படி ஆலய ஆதின கர்த்தாக்கள் தெரிவித்தனர். (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு பாடசாலை முதல்வர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. சந்தையில் விற்பனை முயற்சியில் ஈடுபடுதல், பணத்தைச் சேமித்தல், சேமித்த பணத்தை வங்கியில் வைப்பில் இடுதல் போன்ற அனுபவங்களை மாணவர்கள் பெற்றுக்கொண்டனர். (எ-13)






முல்லைத்தீவு மாவட்டச் செயலக உத்தியோகத்தர் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மாவட்டச் செயலக பயிற்சிப் பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 'அரச துறையில் சொத்து முகாமைத்துவம்' எனும் தொனிப்பொருளில் மாவட்டச் செயலக முல்லைமணி பயிற்சி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ-13)




கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின், புதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் மருத்துவர் பூர்ணிமா விமலரத்ன கடந்த செவ்வாய்க்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ப-113)



தென்மராட்சிக் கல்வி வலயத்தால் கடந்த 2015 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட சாவகச்சேரி, சக்தியம்மன் வித்தியாலய கட்டடத்துக்கான கூரை உள்ளகத் தகடுகள், வித்தியாலயத்தின் பழைய மாணவன் பரமசாமி லோகனின் நிதிப்பங்களிப்பில் அமைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ப-9)



உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு அதிபர் க.உமாபாலன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. (எ-159)



சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கிளிநொச்சி கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாண இணைப்பாளர் ரி.கனக ராஜ் கலந்துகொண்டார். (ப-113)



பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக, சுன்னாகம் பொதுநூலக வளாகத்தில் கண்காட்சியும் விற்பனையும் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெற்றது. (ப-66)



ஐ.எஸ்.ஆர்.சீ. நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் மன்னார் கல்வி வலயத்தில், கடந்த திங்கட்கிழமை இப்தார் நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் தயாளினி தேவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சீ.பி.அமல்ராஜ் கலந்துகொண்டார். (ப-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டால் சட்டம் பாயும்

## மன்னார் கடற்றொழில் திணைக்களம் எச்சரிக்கை

மன்னார், ஏப்.8

அனுமதிப் பத்திரம் இல்லாமல் சுருக்குவலைகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் கடற்றொழில் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மன்னார் கடற்றொழில் திணைக்களம், மீனவர்களுக்கு விடுத்திருக்கும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் ஒரு சிலரே இந்தத் தொழிலுக்கு அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளனர். பலர் அனுமதிப்பத்திரம் பெறாது தொழிலில் ஈடுபட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரம் இன்றி பி.ப. 6 மணிக்குப் பின்னர் எவரும் சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபடவேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-60)

# மத ஒற்றுமையுடன் மன்னார் மாவட்டம்

## மாவட்டச் செயலர் பெருமிதம்

மன்னார், ஏப். 8

இலங்கையின் வட மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களை விட மன்னார் மாவட்டத்துக்கென ஒரு சிறப்பு காணப்படுகின்றது.

பல மதங்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்ற ஒரு மாவட்டமாக மன்னார் மாவட்டம் திகழ்கின்றது என மன்னார் மாவட்ட செயலர் கே. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு முகைதீன் ஜும்மா பள்ளியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற 'இப்தார்' நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் மன்னார் பிரதேசசெயலாளர் எம்.பிரதீப் அருட் தந்தையர்கள், இஸ்லாமிய மதத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், அனைத்துக் கிராமங்களின் நிர்வாகிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-56)



# கிடைக்கும் உதவிகளை சரியாகப் பயன்படுத்துக

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், ஏப். 8

வாழ்வாதார உதவிகளாகக் கிடைப்பவற்றை அதிக இலாபமீட்டும் வகையில் மாற்றியமைக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். இதனூடாக வாழ்வாதாரத்தை மேலும் உயர்ச்சிபெறச் செய்ய முடியும் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உயர் ரக மிளாய் விதைகளை மன்னார் - முசலி பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேறிய மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த விதைகள் கூடிய பலனைத் தரக்கூடிய விதைகளாகும்.

இதைக்கொண்டு நீங்கள் முன்னேற்றம் அடைய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-60)

# மயிலிட்டி கடற்கரையில் தூய்மைச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.8

உலக பூச்சியக் கழிவு தினத்தை முன்னிட்டுக் கடலோரச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை ஆகியவற்றின் பணியாளர்கள் இணைந்து, மயிலிட்டி துறைமுகக் கடற்கரையோரப் பகுதியில் கழிவுகள் அகற்றும் செயற்பாட்டில் கடந்த புதன்கிழமை ஈடுபட்டனர். (ஏ-66)


## வேலையாட்கள் தேவை

சைவ, அசைவ உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை. சிட்டை எழுதுநர், சமையலாளர், ரொட்டி தயாரிப்பாளர், ரீமேக்கர், சப்ளையர், சமையல் உதவியாளர், இடியப்பம் தயாரிக்கக் கூடியவர் (கடை நடத்தத் தகுதி உள்ளவர் ஒருவரும் தேவை)


ஆனைக்கோட்டை.

077 055 6949, 075 238 7405


## மரண அறிவித்தல்

### திரு பாக்கியநாதர் பெனடிற் ஆனந்தராஜா

(President Srilanka Deaf Rehabilition Organization)



பிறப்பு 22.09.1946 — இறப்பு 05.04.2024

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பாக்கியநாதர் பெனடிக்ற் ஆனந்தராஜா கடந்த 05.04.2024 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து பாக்கியநாதர் பரிமளம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும் கால்ஞ்சென்றவர்களான K.ராமன்-காளியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரோஜினி ஆனந்தராஜாவின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான அந்தனி ஜெயராஜா, அலோசியஸ் நேசராஜா, பிலோமினா புஸ்பராணி (Australia), காலஞ்சென்றவர்களான ஜோசப் அருள்ராஜா, டேவிட்தேவராஜா மேரி ரீட்டா நேசராணி (France) மற்றும் அல்பிரட் நவராஜா (Germany), ஆகியோரின் அன்புச் சகோதரரும் கொன்சி சியாமளா (Co-operative Insurance) மரியோ மனோஜ் (Allianz Insurance) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகரட்ணம், தயானி மனோஜ் (Teacher-Good Shepherd Convent) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிறிஷாலினி (HNB-General Insurance), டில்சான் (Comercial Bank), நேத்ரா மதுஷாலினி,ஜியானா நிரல்யா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் 206 குருசோ வீதி யாழ்ப்பாணம் இல்லத்தில் திங்கட்கிழமை காலை 7.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனோஜ் (மகன்)-077 401 2860

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 08 . 1940



மறைவு 07 . 04 . 2024

### இராசமணி கனகசபை

தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், 161, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி கனகசபை அவர்கள் நேற்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் கனகசபை (இளைப்பாறிய கதிர் இயக்கவியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை - அமராவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தில்லையம்பலம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr.பாலசிங்கம் அவர்களின் சகோதரியும், கோசலை, மதியழகன், கேதீஸ்வரன், கேதாரகௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிரீஷன், தமிழ்வாணி ஆகியோரின் மாமியும், கிரித்விகனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2024) திங்கட்கிழமை காலை 08.30 மணியளவில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.மதியழகன்
077 773 9996

(CS 00153) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமளவு பணமும் கஞ்சாவும் மீட்பு

வவுனியா, ஏப். 8
வவுனியா விசேட குற்றப்புல னாய்வுப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பெருமளவு பணம் மற்றும் உயிர்கொல்லி கஞ்சா போதைப் பொருளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.
கார் ஒன்றில் போதைப் பொருளைக் கடத்திச்செல்ல சந்தேகநபர்கள் கடந்த புதன்கிழமை முற்பட்டுள்ள னர். காரை வழிமறித்த பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.
காரினுள் ஒன்பது கிலோகிராம் கஞ்சா மற்றும் பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள் ளன. வவுனியா, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதே சங்களைச் சேர்ந்த நபர்களே இதன்போது கைது செய்யப்பட்டனர். (ஒ-110)



## பொலிஸார்...

காலை 7 மணிக்கு இடம்பெற்றுள்ளது. தர்மபுரம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் இருவர் சிவில் உடையில் வந்து. சந்தேகநபர் ஒருவரை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்துக் கைது செய்ய முயன்றுள்ளனர். ஆனால் எதிர்பாராத வகையில் சந்தேகநபர் கத்தியால் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி தப்பிச் சென்றுள்ளார். அவர் சிறிது நேரத்தில் திரும்பி வந்து தனது மோட்டார் சைக்கிளை எடுத்துச் செல்ல முயன்றபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்துள்ளனர். இதன்போது துப்பாக்கி இயங்கவில்லை. இதனால் சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார். அவரைக் கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். (அ-ஒ-113)

# சித்திரைக் கலைவிழா வவுனியாவில் ஆரம்பம்!

வவுனியா, ஏப். 8
வவுனியா மாவட்ட கலாசார அதிகார சபை நடத்தும் சித்திரைக் கலைவிழா கடந்த வியாழக் க்கிழமை கோலாகலமாக ஆரம்பமானது.
வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட மாவட்ட செயலர் சரத்சந்திர நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (ப-110)



## ஜனாதிபதித்...

அநுராதபுரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த மஹிந்த, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடப் போவதில்லை என்பது அவரது நிலைப்பாடு. நாங்கள் எமது வேட்பாளரை அறிவிப்போம். கட்சியின் நிறைவேற்று சபை ஊடாகச் சிறந்த தீர்மானத்தை எடுப்போம். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குக் காலம் இருக்கின்றது. மேலும், நான் அரசியலிருந்து ஓய்வு பெறுவதற்கு இன்னமும் தீர்மானிக்கவில்லை - என்றார். (அ-ஒ-இ)

## மேலிடத்து...

இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கார்த்திகைப் பூ அலங்காரம் செய்யப்பட்டமை தொடர்பில், மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தமை தொடர்பாக ஆசிரியர் சங்கத்தால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த மனித உரிமை ஆணைக்குழு, பொலிஸாரின் வாக்குமூலத்தைப் பெறுவதற்காக, தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை கடந்த வெள்ளிக்கிழமை, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.
அதன் பிரகாரம் முன்னிலையான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பொறுப்பதிகாரி விடுமுறையில் உள்ளதாகக் கூறி சம்பவம் தொடர்பிலான வாக்கு மூலம் வழங்கினார். அதன் போது தமக்கு பொலிஸ் உயர் அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரமே மாணவர்களைபொலிஸ்நிலையத்துக்கு அழைத்து விசாரணை செய்ததாகத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## இராணுவத்தை...

இராணுவ வீரர்களது மாவட்ட மாநாடு மாத்தளையில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றிய இராணுவத்தினருக்கு அரசாங்கம் மாற்றாந்தாய் கவனிப்பையே காட்டி வருகிறது. 34 ஆயிரம் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குத் தலா 30 இலட்சம் ரூபா வழங்கி சேவையில் இருந்து நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.
நாட்டில் பல்வேறு நிதிப்பிரச்சினைகள் இருந்தாலும், 30 வருட காலப் போரை வெற்றியுடன் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பாடுபட்ட இராணுவத்தினரை மறக்கமுடியாது.
நாட்டு மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வரும் அரசாங்கம் இராணுவத்தினருக்கு காணி உரிமையை உறுதிப்படுத்தவில்லை. இலவசமாக வழங்கி வைத்த காணிகளுக்குப் பணம் அறவிடுவது வெட்கக்கேடான செயல் - என்றார். (அ-ஒ-இ)

## வடக்கில்...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலுக்கு வழங்கப்பட்டுள்ள பதிலில், யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் 13பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 2பேரும், மன்னார் பொலிஸ் பிராந்தியத்தில் 6பேரும், வவுனியா பொலிஸ் பிராந்தியத்தில் 5பேரும், முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்தில் 8பேரும், கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்தில் 16 பேருமாக 50பேர் உயிரிழந்துள்ளனர். (அ-ஒ-5)

## ஈஸ்டர்...

வைப்புவேளை பிரேரணையாக இவ்விவாதம் இடம்பெறும். இதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை எதிரணி முன்வைக்கவுள்ளது.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மைத்திரி வெளியிட்ட அறிவிப்பு தேசிய ரீதியில் மட்டும் அல்ல சர்வதேச ரீதியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் மேற்படி விவாதமும் முக்கியத்துவம் மிக்கதாக மாறியுள்ளது. (அ-ஒ-44)

## தவறான...

இதைவிட கடந்த 4 ஆண்டுகளில் சிறைக்குள் 631 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 357 பேர் சந்தேகநபர்கள்.
கூடுதலான உயிரிழப்புகள் வெலிக்கடை சிறைச்சாலையிலேயே இடம்பெற்றுள்ளதாகவும் இது தற்போது படிப்படியாகக் குறைந்து வருவதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-6)

## மாணவனைத்...

பட்டிருந்தான். இதனைத் தொடர்ந்து சிறுவனின் தந்தை ஆசிரியருக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சிறுவனை தாக்கியமைக்கான காரணத்தைக் கேட்டிருந்தார்.
ஆசிரியரின் பதிலில் பெற்றோர் திருப்தியடையவில்லை. இந்த நிலையில் மருத்துவமனைப் பொலிஸார் ஊடாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து ஆசிரியர் கைது செய்யப்பட்டிருந்தார்.
நேற்றைய தினமே அவர் நீதிவான் முன்பாக முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (அ-ஒ-18-110)

## விபத்தில்...

துள்ளார். மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் செட்டி குளம், வாளவைத்தகுளம் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளும் பட்டா ரக வாகனமும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளின் சாரதியான இளைஞர் உயிரிழந்துள்ளார். (அ-ஒ-110)

## ரயில்...

வாகனம் ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.
பிக்கப் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளார். (அ-ஒ-18)

## வெடிமருந்துடன்...

அவரிடமிருந்து 10 கிலோ நிறையுடைய சி - 4 ரக வெடிமருந்தை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-ஒ-20)

## கேட்பாரின்றித்...

கின்றனர். 30 அடி ஆழத்தில் இருந்த ஆற்றுப்பகுதி தற்பொழுது 50 அடிக்கும் மேலாக மணல் அகழ்வால் பாதிப்படைந்துள்ளது. அருகில் உள்ள வயல் நிலங்கள் இடிந்து விழுவதாகவும் தமது விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடமும் தர்மபுரம் பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தமக்கான வாழ்வாதார நிலங்களை பாதுகாத்துத் தருமாறும் மக்கள் கோருகின்றனர். (அ-ஒ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# லக்னோ சொந்த மண்ணில் கலக்கல்

**யாஸ் தாகூரின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாத குஜராத் அணி, லக்னோவிடம் நேற்று மண்டியிட்டது.**

லக்னோவில் நேற்று இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் லக்னோ அணியை எதிர்த்து குஜராத் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லக்னோ அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணிக்கு ஆரம்பம் கைகொடுக்க வில்லை. டி குக் 6 ஓட்டங்களுடனும், ராகுல் 31 பந்துகளை எதிர்கொண்டே 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஸ்ரொய்னிஸ் 43 பந்துகளைச் சந்தித்து 58 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார். ஆயுஸ் பதானி, நிக்லஸ் பூரன் இருவரும் அதிரடியாக ஆட 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடத்தொடங்கிய குஜராத் அணி சாய் சுதர்சனின் அதிரடியான ஆட்டத்தால் முதலில் ஓட்டங்களைக் குவித்தாலும் குருனல் பாண்டியாவின் வருகையின் பின்னர் குஜராத்தின் இலக்குகள் சரியத்தொடங்கின. கில் 21 பந்துகளில் 19 ஓட்டங்கள், சாய் சுதர்சன் 23 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட வில்லியம்ஸன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அதன் பின்னர் அந்த அணிக்கு சரிவு முகமாகவே இருந்தது. ராகுல் திவாட்டியா 25 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் யாஸ் தாகூர் அசத்த குஜராத் அணி 18.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. யாஸ் தாகூர் 30 ஓட்டங்களுக்கு 5 இலக்குளை வீழ்த்தினார். (ஒ.5)



# மும்பைக்கு முதல் வெற்றி

**நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பை அணி தனது முதலாவது வெற்றியை டெல்லி அணிக்கு எதிராகப் பதிவு செய்தது.**

மும்பையின் வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் பந்து வீசத் தீர்மானித்தது. வழமைக்கு மாறாக மும்பை அணி ஆரம்பத்திலிருந்தே வெளுத்து வாங்கியது. ரோகித் 27 பந்துகளில் 49 ஓட்டங்களுடனும், இசான் கிசான் 23 பந்துகளில் 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். சூர்யகுமார் யாதவ் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தாலும் பின்வரிசையில் ரிம் டேவிட் மற்றும் மே.இந்திய தீவுகளின் ரொமரியோ செப்ஹேட் இருவரும் டெல்லியின் பந்து வீச்சை பிரித்து மேய்ந்தனர். கடைசி இரண்டு பந்துப் பரிமாற்றங்களில் மாத்திரம் 53 ஓட்டங்கள் குவித்தனர். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடத் தொடங்கிய டெல்லி அணிக்கு ஆரம்பமே சறுக்கலாக அமைந்தது. டேவிட் வோர்னர் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பிரித்வி சா மாத்திரம் வெளுத்து வாங்கினார். அபிசேக் போரல் சுமாரான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால் ரிஸ்ரன் ஸ்ரப்ஸ் மாத்திரம் இறுதி வரை அதிரடியாக ஆடினார். 25 பந்துகளில் 71 ஓட்டங்கள் குவித்து இறுதிவரையில் ஆட்டமிழக்காது இருந்தார். 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 205 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 29 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் கொட்சீ 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

(ஒ-5)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பண்ணை ஒன்றிற்கு ஊழியர்களை மேற்பார்வை செய்வதற்கு பயிர்ச்செய்கை. கால்நடை தொடர்பான கல்வி அறிவும் குறைந்த பட்சம் 3 வருட அனுபவமும் உடைய வேலையாள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பது அவசியமானது மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

whatsapp - 076 287 8655

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1940



மறைவு 07 . 04 . 2024

### பொற்கொடி ஜெயசிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்.
ஆசிரியர் விவேகானந்தா வித்தியாசாலை மானிப்பாய்)

நவாலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொற்கொடி ஜெயசிங்கம் நேற்று காலை (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஜெயசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான தேவமலர், காந்திமதி, விஜேந்திரன், பாலேந்திரன், குலேந்திரன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனுஷா (ஆசிரியர் கொ/ விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம் தெமட்டகொட), அரவிந்தன் (லண்டன்), குமுதினி (ஆசிரியை கொ/ றோயல் கல்லூரி), நந்தினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சற்குணலிங்கம் (உரக் கூட்டுத்தாபனம் கொழும்பு) விஜிதா (லண்டன்), சுரேஷ் (முகாமையாளர், மக்கள் வங்கி), கஜேந்திரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரணி, சந்தோஷ், ஜனன், ஷிரானி, ஹனியல், ஜெரோம், றோய்டன், கெல்வின் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (09.04.2024) செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி அமெரிக்க மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அரவிந்தன் (மகன்)
0044 757 665 8358
074 147 8160

சென் பீற்றர்ஸ் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- மருதனார்மடம் இராமநாதன் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்:

காலை 06.00 மணிதொடக்கம்
மாலை 06.00 மணிவரை

தொடர்புகளுக்கு:
ஜெயம்
077 814 7389, 077 986 5457

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.